# வணிகவரி மற்றும் பதிவுத் துறை

## மானியக் கோரிக்கை எண். 10

## வணிகவரிகள்

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2014-2015

**எம்.சி.சம்பத்**
வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2014

## பொருளடக்கம்


| வரிசை எண். | பொருள் | | பக்கம் எண். |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | | 1–2 |
| 2. | நிர்வாக அமைப்பு | | 2 |
| | 2.1 | வரிவிதிப்புப் பிரிவு | 3–4 |
| | 2.2 | தணிக்கைப் பிரிவு | 4–5 |
| | 2.3 | மேல்முறையீட்டு பிரிவு | 5–7 |
| | 2.4 | செயலாக்கப் பிரிவு | 7–8 |
| 3. | புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | | 8–9 |
| 4. | வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் | | 9–10 |
| 5. | துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | | 10 |
| 6. | வரி வருவாய் வசூலின் போக்கு (Trend in tax revenue collection) | | 11 |
| 7. | கடந்த ஐந்து ஆண்டுகளில் சட்ட வாரியான வருவாய் | | 12 |
| 8. | வரி நிர்வாகத்திற்கான செலவு | | 13 |
| 9. | வரி / மாநில மொத்த உற்பத்தியுடனான (Gross State Domestic Product) வருவாய் விகிதம் | | 13–14 |
| 10. | நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கூட்டங்கள் | | 14–15 |
| 11. | வணிகர்கள் விழிப்புணர்வு முகாம் | | 15 |

| | | | |
|---|---|---|---|
| 12. | வரி சீரமைப்பு (Tax Reforms) | | 16 |
| | 12.1 | வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் கருதுவதற்கு வழிவகை செய்தது (Provision for Deemed Assessment) | 16 |
| | 12.2 | தெளிவுரை மற்றும் முன்தீர்வு முடிவு வழங்கும் அதிகார அமைப்பினை நிறுவியது (Constitution of Clarification and Advance Ruling Authority) | 16 |
| | 12.3 | சிறு வணிகர்கள் உள்ளீட்டு வரி வரவினைப் (Input Tax Credit) பெறுவதற்கு வழிவகை செய்தது | 17 |
| | 12.4 | இணக்க வரி (Compounding Tax) செலுத்தும் முறையிலுள்ள முரண்பாட்டைக் களைந்தது | 17–18 |
| | 12.5 | துணை வணிகவரி அலுவலர்களின் வரிவிதிப்பு அதிகார வரம்பினை உயர்த்தியது | 18 |
| 13. | வரி விலக்குகள் / குறைப்புகள் | | 18 |
| | 13.1 | வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் மீதான மதிப்புக்கூட்டு வரி விலக்கு (Removal of VAT on domestic LPG) | 18 |
| | 13.2 | ஜென்செட்டுகள் மீதான வரிக் குறைப்பு (Reduction in rate of tax for Gensets) | 18 |
| | 13.3 | உயரழுத்த மின் நுகர்வோர்கள் (High Tension Consumers) பயன்படுத்தும் எரி உலை எண்ணெய் (Furnace oil) மீது வரி விலக்கு | 19 |

| | | | |
|---|---|---|---|
| | 13.4 | மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் பின்பக்கம் மோட்டார் பொருத்தப்பட்ட பேட்டரியினால் இயங்கும் ஸ்கூட்டர்களுக்கு (Battery Operated Motorised Retrofitted Scooters) வரி விலக்கு | 20 |
| | 13.5 | ஆடம்பர வரி (Luxury Tax) செலுத்துவதில் இருந்து விலக்கு பெறுவதற்கான உச்சவரம்பு உயர்வு | 20 |
| 14. | சிறந்த முறையில் வரி வசூல் செய்வதற்கான நடவடிக்கைகள் | | 21 |
| | 14.1 | வர்த்தகப் புலனாய்வுப் பிரிவு (Business Intelligence Unit) | 21 |
| | 14.2 | பட்டயக்கணக்கர் (Chartered Accountant) / விலை மதிப்பீட்டுக் கணக்கர் (Cost Accountant) ஆகியோர்களைக் கொண்டு தணிக்கை செய்தல் | 22–23 |
| 15. | தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் தொகுப்பு நிதியை (Corpus fund) உயர்த்துதல் | | 23–24 |
| 16. | பல்பொருள் சில்லறை வர்த்தகத்தில் (Multi-brand retail trade) அந்நிய நேரடி முதலீட்டிற்கு (Foreign Direct Investments) மறுப்பு | | 24–25 |
| 17. | துறையின் கட்டடங்களில் சூரிய சக்தியினை ஊக்குவித்தல் | | 25–26 |
| 18. | சரக்கு மற்றும் சேவை வரி (Goods and Services Tax) | | 26 |

| | | | |
|---|---|---|---|
| 19. | மத்திய அரசிடமிருந்து பெறப்பட வேண்டிய வருவாய் இழப்பீடு | | 26 |
| | 19.1 | மதிப்புக் கூட்டு வரி இழப்பீடு | 26 |
| | 19.2 | மத்திய விற்பனை வரி இழப்பீடு | 27 |
| 20. | தகவல் தொழில்நுட்பம் | | 27–29 |
| 21. | வணிகர்களுக்கு வழங்கப்படும் மின்னணு சேவைகள் (Electronic Services provided to dealers) | | 29 |
| | 21.1 | வணிகர்களின் பதிவு (Registration of Dealers) | 29 |
| | 21.2 | மின்னணு முறையில் நமூனாக்கள் தாக்கல் செய்தல் (e-Filing of Returns) | 29–30 |
| | 21.3 | இணையதளம் வழியாக வங்கிகளில் நேரடியாக வரி செலுத்தும் வசதி (e-Payment through net banking) | 30 |
| | 21.4 | மின்னணு வழி வரி செலுத்துதல் (e-Payment through e-chalan) | 30–31 |
| | 21.5 | மின்னணு முறையில் படிவங்கள் ‘C’ மற்றும் ‘F’ உருவாக்கிக் கொள்ளுதல் (Online issue of ‘C’ & ‘F’ forms) | 31 |
| | 21.6 | சோதனைச் சாவடிகளில் விரைவு வழி அனுமதி முறை (Fast Track Clearance System at the Checkposts) | 31–32 |

| | | | |
|---|---|---|---|
| | 21.7 | மின்னணு முறையில் இடைவழிச் சீட்டு பெறுதல் (Online issue of Transit Pass) | 32–33 |
| | 21.8 | ஏற்றுமதியாளர்கள் வரி திருப்புகை பெறுதல் (Refunds to exporters) | 33 |
| | 21.9 | மின்னணு முறையில் வருடாந்திரப் படிவங்கள் தாக்கல் செய்தல் (e-Filing of Annual Returns) | 33–34 |
| | 21.10 | தகவல் மீட்பு ஆய்வகம் (Data Retrieval Lab) | 34 |
| | 21.11 | இதர மின்னணு சேவைகள் (Other online Services) | 34–36 |
| | 21.12 | வரித் தகவல் பரிமாற்ற அமைப்பு (Tax Information Exchange System) | 36–37 |
| | 21.13 | முழுமையான கணினிமயமாக்கல் (Total Solution Project) | 37–38 |
| 22. | உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளை மேம்படுத்துதல் | | 39 |
| | 22.1 | சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 39–40 |
| | 22.2 | சோதனைச்சாவடிகள் மற்றும் சோதனை முனையங்களை நவீனமயமாக்குதல் (Modernisation of Checkpost and Checkpoints) | 41 |
| | 22.3 | சென்னை வணிகவரி கோட்டங்களின் எல்லையை மறு சீரமைத்தல் (Reorganisation of Chennai Commercial Taxes Divisions) | 41–42 |

| | | |
|---|---|---|
| 23. | 2005–ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் | 42–43 |
| 24. | 2014–2015–ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டங்கள் | 43–44 |

**முன்னுரை**

முன்னேற்றப்பாதையில் உள்ள தமிழ்நாடு, பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் மேம்பாட்டுப் பணிகளைச் செயல்படுத்துவதில் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இத்திட்டங்களில் பல, பிற மாநில அரசுகளாலும், மத்திய அரசாலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. மாநிலத்திற்கு வருவாய் ஈட்டித் தரும் முக்கிய துறைகளில் ஒன்றான வணிகவரித்துறை, தொலைநோக்குத் திட்டத்தை செயல்படுத்துவதற்குத் தேவையான நிதி ஆதாரங்களை திரட்டுவதில் தனக்குள்ள முக்கிய பொறுப்பினை முழுவதுமாக உணர்ந்துள்ளது. இத்துறை, வணிகத்தை சீரமைத்தல் மற்றும் வரி வசூலினை கவனிப்பது மட்டுமல்லாமல், வணிகர் நலனில் அக்கறையுடனும், நட்புடனும் செயல்பட்டு வருகிறது.

இந்தியப் பொருளாதாரத்தில் நிலவிய பொதுவான மந்த நிலை மற்றும் மாநிலத்தில் விவசாயம் நலிவடைந்த காலத்திலும், **2013–2014**–ஆம் ஆண்டில் வணிகவரித் துறை ரூ.56,852 கோடி மொத்த வரி வருவாயினைத் திரட்டியுள்ளது. இது முந்தைய ஆண்டின் வருவாயைக் காட்டிலும் **18.73** விழுக்காடு வளர்ச்சியாகும். வரி நிர்வாகம் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டதன் காரணமாக இந்த வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது. வணிகவரித் துறை, மாநில அரசுக்கு அதிக அளவில் நிதி ஆதாரத்தினைத் திரட்டி தருவதோடு, மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்கினை ஈட்டித் தருகிறது. **2014–2015**–ஆம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீடுகளின்படி, வணிகவரியின் வாயிலாக இந்த ஆண்டு ரூ.**68,724** கோடி ஈட்டப்படும் என

எதிர்பார்க்கப்படுகிறது. துறையின் செயல்பாடுகளை செம்மைப்படுத்துதல் மற்றும் வரி ஏய்ப்பினைத் தடுப்பதன் மூலம், நடப்பாண்டின் வருவாய் இலக்கினை எய்த முடியும்.

இந்தியாவின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், வரி நிர்வாகத்தில் தமிழ்நாடு பாரம்பரியமாக அதிகத் திறன் வாய்ந்துள்ளது என்பது மாநில மொத்த உற்பத்தியுடன் (Gross State Domestic Product) ஒப்பிடுகையில் வசூலிக்கப்பட்ட அதிக வரியின் மூலம் பிரதிபலிக்கிறது. 2012–2013–ல் மாநில மொத்த உற்பத்தியில் மொத்த வணிக வரி வருவாய் 6.93 விழுக்காடாக இருந்தது. இது, 2013–2014–ஆம் ஆண்டில் 7.02 விழுக்காடாக வளர்ச்சியடைந்துள்ளது.

## 2. நிர்வாக அமைப்பு

வரிவிதிப்பு மற்றும் வரிவசூல் செய்தல் என்பது ஒரு நாணயத்தில் இரு பக்கங்கள் போன்றதாகும். திடமான வரி வசூலுக்கு நல்ல மற்றும் திறன் மிக்க ஆளுமையானது அவசியமாகிறது. வணிகவரி ஆணையரை நிர்வாகத் தலைமையாகக் கொண்டு மாநிலம் முழுவதும் உள்ள நன்கு இணைக்கப்பட்ட கட்டமைப்புடன் கூடிய சார்நிலை அலுவலகங்களால் இது சாத்தியமாகிறது. சென்னையை தலைமையிடமாகக் கொண்ட வணிகவரி ஆணையருக்கு உதவியாக, ஐந்து கூடுதல் ஆணையர்கள் மற்றும் ஒரு இணை ஆணையர் (நிர்வாகம்) உள்ளனர். வணிகப் பெருமக்களுடனான தொடர்பினை எளிமையாக்கிடவும், நிர்வாகத்தில் திறனை எய்திடவும், இத்துறை பணிகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டு, அதன் பல்வேறு பொறுப்புகளை கீழ்க்கண்டவாறு நான்கு வெவ்வேறு பிரிவுகள் மூலம் மேற்கொள்கிறது.

## 2.1 வரிவிதிப்புப் பிரிவு

மாநிலம் முழுவதும் அமைந்துள்ள 319 வரிவிதிப்பு வட்டங்கள் மாநிலத்தின் வரி வசூலிப்புக்கு முதுகெலும்பாக திகழ்கின்றன. பதிவுச் சான்று வழங்குதல் முதல் வரி வசூலிப்பு செய்தல் வரையிலான பன்முகச் செயல்களை ஆற்றும் இந்த வரிவிதிப்பு வட்டங்களுக்கு, அந்தந்த வட்டத்தின் பரப்பளவு மற்றும் வரிவிதிப்பில் கடினத்தன்மையினைப் பொறுத்து துணை ஆணையர்கள்/ உதவி ஆணையர்கள்/ வணிகவரி அலுவலர்கள் தலைமை வகிக்கின்றனர். இந்த வரிவிதிப்பு வட்டங்களின் செயல்பாடுகள் மாவட்ட/ சரக அளவில் உள்ள 40 நிர்வாக துணை ஆணையர்கள் மற்றும் கோட்ட அளவில் உள்ள 10 இணை ஆணையர்களின் நேரடி கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன.

துறையால் வசூலிக்கப்படும் வரியில் ஏறக்குறைய 60 விழுக்காடு அளவிற்கு வரி செலுத்தும் சென்னை மண்டலத்திலுள்ள 100 அதிக வரி செலுத்தும் வணிகர்களுக்கென சென்னையில் ஒரு அதிக வரி செலுத்துவோருக்கான பிரிவு (Large Tax Payers Unit) உள்ளது. இப்பிரிவு, ஒரு இணை ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் வரிவிதிப்பு மற்றும் பிற சட்டரீதியான பணிகளை மேற்கொள்ள நான்கு துணை ஆணையர்களுடன் இயங்கி வருகிறது.

மாதாந்திர நமூனாக்களை கூர்ந்தாய்வு செய்தல் வரிவிதிப்பு அலுவலர்களின் முக்கிய கடமையாகும். மேலும், 2008–2009, 2009–2010, 2010–2011 மற்றும் 2011–2012 ஆகிய வருடங்களுக்கு 5 விழுக்காடு வணிகர்களின் கணக்குகளை விரிவான முறையில்

கூர்ந்தாய்வு செய்ய மார்ச், 2014–இல் வரிவிதிப்பு அலுவலர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 01.04.2014 முதல் தொடங்கப்பட்ட இந்த நடவடிக்கையின் மூலம் இனிவரும் 12 மாதங்களில் வரி வசூல் சிறந்த முறையில் மேம்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.2 தணிக்கைப் பிரிவு

தணிக்கை என்பது எந்த ஒரு வரி நிர்வாகத்திற்கும் உள்ளார்ந்த பகுதியாகும். ஏனெனில், சரியான வரித்தொகையைக் கண்டறிதல், வரிவிதிப்பில் ஏற்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டுதல், ஆவணங்களை சரிபார்ப்பதால் வரித் திருப்புகை மூலம் அரசின் நிதி வழிந்தோடாமல் தடுத்தல் மற்றும் சட்டத்திற்குப் புறம்பான செயல்களை தடுத்து நிறுத்துதல் போன்றவற்றை தணிக்கையின் மூலம் மேற்கொள்ளலாம்.

ஆற்றல் மிக்க தணிக்கைக்கு, ஒரு தெளிவான அணுகுமுறை மட்டுமின்றி, அறிவார்ந்த கண்ணோட்டம், திடமான தொழில்நுட்ப அறிவு, நல்ல முடிவெடுக்கும் திறன் மற்றும் சிறந்த கூர்ந்தாய்வு ஆகியன அவசியமானதாகும். துறையில் செயல்பட்டு வரும் உள் தணிக்கை குழுக்களிடம் இத்தகைய திறன்களை வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டம் / சரகத்திலும் ஒரு உதவி ஆணையர் மற்றும் ஒரு வணிகவரி அலுவலர் தலைமையில் ஒரு உள் தணிக்கைக் குழு உள்ளது. இந்த உள் தணிக்கைக் குழுக்கள் இணை ஆணையரால் வகுக்கப்படும் செயல்திட்டத்தின் அடிப்படையில் தொடர்ச்சியான தணிக்கையினை மேற்கொள்கின்றன. அனைத்து இணை ஆணையர்களும் தணிக்கை தொடர்பான காலாண்டு முன்னேற்பாடு செயல் திட்டங்கள் வகுத்து செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளனர். தணிக்கையின்

தரத்தை உயர்த்துவதனால், வரிவிதிப்பு வட்டங்களில் வரிவிதிப்பு தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் சரியான முறையில் பின்பற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தவிர, வரிவிதிப்பு வட்டங்களில் மாநிலக் கணக்காயரால் வருடாந்திர தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மாநிலக் கணக்காயரால் சுட்டிக்காட்டப்படும் முக்கியத்துவம் வாய்ந்த தணிக்கைக் குறிப்புகள் வணிகவரி மற்றும் பதிவுத் துறை முதன்மைச் செயலாளர் அவர்களால் தொடர்ச்சியாக நடத்தப்படும் துறை அளவிலான தணிக்கைக் குழுக் கூட்டங்களில் விவாதிக்கப்படுகின்றன. இக்கூட்டங்களில், வணிகவரி ஆணையர் மற்றும் மாநில கணக்காயர் அலுவலகத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர்.

மாநிலக் கணக்காயர் மற்றும் உள் தணிக்கைக் குழுவின் தணிக்கைக் குறிப்புகளின் மீது இறுதி முடிவெடுத்து வரி வசூலை மேம்படுத்த ஒரு சிறப்பு முயற்சி, ஏப்ரல் 2014–இல் தொடங்கப்பட்டுள்ளது.

## 2.3 மேல்முறையீட்டு பிரிவு

வரிவிதிப்பு அலுவலரின் ஆணைக்கு எதிரான முதல் மேல்முறையீடு, அதிகார வரம்பிற்குட்பட்ட மேல்முறையீட்டு துணை ஆணையர் / இணை ஆணையரிடம் உள்ளது. மாநிலத்தில் 20 மேல்முறையீட்டு துணை ஆணையர்களும், 2 மேல்முறையீட்டு இணை ஆணையர்களும் விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கட்டுப்பாட்டில் உள்ளனர். மேல்முறையீட்டு அதிகார அமைப்புகளிடம் துறையின் வழக்குகளை முன்வைத்திடும் பொருட்டு, உதவி ஆணையர் பணி நிலையில் துறைப் பிரதிநிதிகள் நியமிக்கப்படுகின்றனர்.

முதல் முறையீட்டு அதிகார அமைப்பினால், அதாவது, மேல்முறையீட்டு துணை ஆணையர் / இணை ஆணையரால் பிறப்பிக்கப்படும் ஆணைக்கு எதிராக விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் இரண்டாம் மேல்முறையீடு செய்யலாம்.

தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு சென்னையிலும், கூடுதல் அமர்வுகள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரிலும் அமைந்துள்ளன. மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு, மாவட்ட நீதிபதி நிலையில் தலைவராகக் கொண்டுள்ளது. இந்திய தணிக்கை மற்றும் கணக்குகள் பணி / வருமானவரித் துறை / மத்திய கலால் துறை அல்லது சுங்கத் துறை அல்லது இரயில்வே கணக்குகள் துறை அல்லது பாதுகாப்பு கணக்குகள் துறை அல்லது இந்திய பட்டயக் கணக்கர்கள் நிறுவனம் அல்லது இந்திய விலை மதிப்பீட்டு கணக்கர்கள் நிறுவனத்தின் உறுப்பினர் யாரேனும் ஒருவர் இரண்டாவது உறுப்பினராகவும் மற்றும் கூடுதல் ஆணையர் பணி நிலையில் உள்ள துறை அலுவலர் ஒருவர் துறை உறுப்பினராகவும் இத்தீர்ப்பாயத்தில் நியமிக்கப்படுகின்றனர்.

கூடுதல் அமர்வுகள், சார்நிலை நீதிபதி நிலையில் நீதித்துறை உறுப்பினர் ஒருவர் தலைமையிலும், இணை ஆணையர் பணி நிலையில் துறை சார்பாக கூடுதல் உறுப்பினர் ஒருவரைக் கொண்டும் அமைக்கப்படுகிறது. வழக்குகளில் துறையின் வாதத்தினை முன்வைத்திடும் பொருட்டு இணை ஆணையர் பணி நிலையில் ஒரு மாநிலப் பிரதிநிதியும், துணை ஆணையர் பணி நிலையில் ஒரு கூடுதல் மாநிலப் பிரதிநிதியும், முறையே முதன்மை அமர்வு மற்றும் கூடுதல் அமர்வுகளில் வாதிடுவர்.

வரி வழக்குகள் தொடர்பாக, துறையின் சார்பில் ஒரு அரசு சிறப்பு வழக்கறிஞர் உயர்நீதி மன்றத்திலும், தமிழ்நாடு பதிவு வழக்கறிஞர் ஒருவர் உச்சநீதி மன்றத்திலும் வாதிடுவர்.

## 2.4 செயலாக்கப் பிரிவு

செயலாக்கப் பிரிவு மாநிலம் முழுவதும் எட்டு கோட்டங்களையும், சென்னையில் மாநிலங்களுக்கிடையேயான ஒரு புலனாய்வுக் குழுவையும் கொண்டுள்ளது. இந்த செயலாக்கப் பிரிவுகள் மற்றும் மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுக் குழுவும் இணை ஆணையர் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. போக்குவரத்து வாகனங்களில் சோதனை மற்றும் வணிக இடங்களில் ஆய்வு / தணிக்கை மேற்கொண்டு, வரி ஏய்ப்பினைக் கட்டுப்படுத்துதல், செயலாக்கப் பிரிவின் முதன்மைப் பணியாகும். ஆந்திர பிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநில எல்லைகளில் அமைந்துள்ள 28 சோதனைச் சாவடிகள், மாநிலத்திற்குள் முக்கியமான இடங்களில் அமைந்துள்ள 13 சோதனை முனையங்கள் மற்றும் 61 சுற்றும் படைகள் மூலம் மாநிலங்களுக்கிடையேயான சரக்கு போக்குவரத்து கண்காணிக்கப்படுகிறது. சோதனைச் சாவடிகளும், சோதனை முனையங்களும் நிலையான இடத்தில் அமைந்துள்ள போது சுற்றும் படைகள் (Roving squads) நடமாட்டத்தில் இருந்து வரும்.

இது தவிர வணிகம் நடைபெறும் இடங்களில் வரி ஏய்ப்பினைக் கண்டறிவதற்கு தணிக்கைகள் மற்றும் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ள செயலாக்கப் பிரிவில் கூடுதலாக 144 குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இக்குழுவில் ஒரு வணிகவரி அலுவலர் மற்றும் ஒரு துணை வணிகவரி அலுவலர் உள்ளனர்.

இணை ஆணையர் தலைமையிலான மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுக் குழு, மாநிலங்களுக்கிடையேயான வணிகப் பரிவர்த்தனைகளில் வரி ஏய்ப்பினைக் கட்டுப்படுத்த, பிற மாநில அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதுடன், வரி ஏய்ப்பினைத் தடுப்பதற்கான மேல்நடவடிக்கை மேற்கொள்வதற்காகத் தகவல்களை பரிமாற்றம் செய்து கொள்கிறது. இக்குழு, குறிப்பாக, மாநிலத்திற்கு உள்ளேயும் / வெளியேயுமான வரி ஏய்ப்புக்குள்ளாகும் பொருட்களின் நடமாட்டத்தினைக் கண்காணிக்கிறது.

### 3. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

புள்ளியியல் துறை இணை இயக்குநர் தலைமையிலான புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவில், ஒரு இணை ஆணையர் (புள்ளியியல்), இரு புள்ளியியல் அலுவலர்கள் மற்றும் இரு புள்ளியியல் ஆய்வாளர்களும் உள்ளனர்.

ஒவ்வொரு வணிகவரி மாவட்டத்திலும், இணை ஆணையருக்கு உதவியாக ஒரு இளநிலை ஆராய்ச்சி அலுவலரும், துணை ஆணையர்களுக்கு உதவியாக கோட்ட அலுவலகத்தில் ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் உள்ளனர்.

புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவால் கீழ்கண்ட அறிக்கைகள் / வெளியீடுகள் தொடர்ச்சியாக வெளியிடப்படுகின்றன:

1. ‘வணிகவரித் துறை – ஒரு கண்ணோட்டம்’ – ஆண்டுதோறும்
2. ‘வணிகவரித் துறையின் முக்கிய குறியீடுகள்’ – ஆண்டுதோறும்
3. ‘வணிகவரித் துறையின் புள்ளி விவரத்தொகுப்பு – காலமுறை அறிக்கை’ – ஆண்டுதோறும்
4. அனைத்து கோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் 100 பெரு வணிகர்களின் வருவாய் பகுப்பாய்வு – மாதந்தோறும்
5. அனைத்து கோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் அதிக வருவாய் ஈட்டும் பொருட்கள் குறித்த வருவாய் பகுப்பாய்வு– மாதந்தோறும்
6. சட்டவாரியான மற்றும் கோட்ட வாரியான வருவாய் அறிக்கை – மாதந்தோறும்
7. கோட்டங்களின் செயல்பாடு குறித்த அறிக்கை – மாதந்தோறும்

**4. வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம்**

வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் 1982–ஆம் ஆண்டு முதல் இணை ஆணையர் பணி நிலையில் உள்ள ஒரு இயக்குநரின் தலைமையில் சென்னையில் இயங்கி வருகிறது. வணிகவரித் துறையில் உள்ள அலுவலர்களுக்கு ‘பணியிடைப் பயிற்சி’ மற்றும் ‘புத்தாக்கப் பயிற்சி’ அளிப்பதே இதன் நோக்கமாகும். வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய கோட்டத் தலைமையிடங்களிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், துறையிலுள்ள

அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அடிப்படை கணக்கிடும் (basic computing) பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

## 5. துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

வணிகவரித் துறையால் பின்வரும் சட்டங்கள் நிர்வகிக்கப்படுகின்றன:–

1. 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் (31.12.2006 வரை)
2. 1970–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம் (31.12.2006 வரை)
3. 2006–ஆம் ஆண்டு தமிழ் நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் (1.1.2007 முதல்)
4. 1956–ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்
5. 1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம்
6. 1935–ஆம் ஆண்டு தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம்
7. 1981–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பரங்கள் மீதான வரிச் சட்டம்
8. 1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவு மீதான வரிச் சட்டம்
9. 2001–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் சரக்குகள நுழைவு மீதான வரிச் சட்டம் (சென்னை உயர்நீதிமன்றம் தனது 23.3.2007 நாளிட்ட தீர்ப்பின்படி இச்சட்டம் செல்லாது என ஆணையிட்டது. இதன் மீதான மேல்முறையீடு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது)
10. 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரங்கள் வரிச் சட்டம்

## 6. வரி வருவாய் வசூலின் போக்கு (Trend in Tax Revenue Collection)

இந்திய பொருளாதாரத்தில் பொதுவான மந்த நிலை ஏற்பட்ட போதிலும், வரி ஏய்ப்பினைத் தடுத்திட மேற்கொள்ளப்பட்ட சிறந்த கண்காணிப்பு மற்றும் தீவிரமான செயலாக்கத்தின் விளைவால், வரி வருவாய் வசூலில் ஒரு ஆரோக்கியமான வளர்ச்சியை துறை தக்க வைத்துள்ளது. மதிப்புக் கூட்டு வரி (Value Added Tax) அமல்படுத்தப்பட்ட பின் கடந்த ஐந்தாண்டுகளில் துறையால் நிர்வகிக்கப்படும் அனைத்துச் சட்டங்களின் கீழ் வசூலிக்கப்பட்ட வரி வருவாய் மற்றும் வளர்ச்சி வீத விவரங்கள் பின்வருமாறு:

| ஆண்டு | வரி வருவாய் (ரூபாய் கோடியில்) | வளர்ச்சி வீதம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 2009–2010 | 24,819 | 09.96 % |
| 2010–2011 | 31,117 | 25.37 % |
| 2011–2012 | 39,545 | 27.09 % |
| 2012–2013 | 47,885 | 21.09 % |
| 2013–2014 | 56,852 | 18.73 % |

## 7. கடந்த ஐந்து ஆண்டுகளில் சட்ட வாரியான வருவாய்

கடந்த ஐந்து ஆண்டுகளில் சட்டவாரியான வருவாய் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன : -

(ரூபாய் கோடியில்)

| | சட்டம் | 2009–2010 | 2010–2011 | 2011–2012 | 2012–2013 | 2013–2014 |
|---|---|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டம் | 21,477 | 26,558 | 33,997 | 42,038 | 51,245 |
| 2. | மத்திய விற்பனை வரிச் சட்டம் | 1,773 | 2,263 | 2,819 | 2,904 | 3,116 |
| 3. | தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் | 218 | 350 | 259 | 261 | 218 |
| 4. | கேளிக்கை வரிச் சட்டம் | 13 | 16 | 59 | 70 | 68 |
| 5. | பந்தய வரிச் சட்டம் | 7 | 6 | 7 | 6 | 6 |
| 6. | ஆடம்பர வரிச் சட்டம் | 169 | 216 | 256 | 290 | 299 |
| 7. | நுழைவு வரிச் சட்டம் | 1,162 | 1,708 | 2,148 | 2,316 | 1,900 |
| | **மொத்தம்** | **24,819** | **31,117** | **39,545** | **47,885** | **56,852** |

## 8. வரி நிர்வாகத்திற்கான செலவு

வணிகவரித் துறையின் வரி நிர்வாகச் செலவு மிகவும் குறைவானது. இச்செலவினம் வணிகவரித் துறையின் மொத்த வரி வருவாயில் ஒரு விழுக்காட்டை எப்போதும் கடந்ததில்லை. 2013–2014–ஆம் ஆண்டிற்கான மொத்த வணிக வரி வருவாயில், வெறும் 0.30 விழுக்காடு தான் நிர்வாகச் செலவு செய்யப்பட்டுள்ளது. வணிகவரித் துறையின் வருவாய் வரவுகள் மற்றும் செலவு விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

| | 2009–2010 | 2010–2011 | 2011–2012 | 2012–2013 | 2013–2014 |
|---|---|---|---|---|---|
| 1. வரவுகள் | 24,819 | 31,117 | 39,545 | 47,885 | 56,852 |
| 2. செலவுகள் | 205.10 | 196.45 | 224.05 | 214.73 | 173.89 |
| 3. வரவிற்கும் செலவிற்குமான விழுக்காடு | 0.83% | 0.63% | 0.57% | 0.45% | 0.30% |

## 9. வரி / மாநில மொத்த உற்பத்தியுடனான (Gross State Domestic Product) வருவாய் விகிதம்

தமிழ்நாடு, மாநில மொத்த உற்பத்தியின் அடிப்படையில் இந்தியாவில் நான்காவது பெரிய மாநிலமாக விளங்குகிறது. மாநில மொத்த உற்பத்தியின் பின்னணியில் காண்கையில், வருவாய் வசூலானது, அதன் ஆழம் (வரி வீதங்கள்) மற்றும் அகலத்தின் (வரி

ஏய்ப்பினைத் தவிர்த்தல்) குறியீடாக செயல்படுகிறது. மதிப்புக் கூட்டு வரிக் காலத்தில் மாநிலத்தின் மொத்த உற்பத்தியுடன், துறையின் மொத்த வரி வருவாய் ஒப்பீட்டு விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | மொத்த வணிகவரி வசூல் | மாநிலத்தின் மொத்த உற்பத்தி | சதவீதம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 2009–2010 | 24,819 | 4,73,519 | 5.24% |
| 2010–2011 | 31,117 | 5,18,576 | 6.00% |
| 2011–2012 | 39,545 | 5,81,635 | 6.79% |
| 2012–2013 | 47,885 | 6,90,542 | 6.93% |
| 2013–2014 | 56,852 | 8,08,766 | 7.02% |

## 10. நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கூட்டங்கள்

ஆண்டுதோறும், மாநிலம் முழுவதுமுள்ள வணிகம் மற்றும் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கூட்டத்தை இத்துறை நடத்தி வருகிறது. 2011–லிருந்து 1.8.2011, 22.3.2012, 18.3.2013 மற்றும் 11.02.2014 ஆகிய தேதிகளில் இக்கூட்டம் நடத்தப்பட்டது. நிதித்துறை அமைச்சர் தலைமையேற்று நடத்தும் இக்கூட்டத்தில், வணிகவரித் துறை அமைச்சர், நிதித் துறை முதன்மைச் செயலர், வணிகவரித் துறை முதன்மைச் செயலர், வணிகவரி ஆணையர் மற்றும் துறையின் உயர் அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர். இக்கூட்டத்தில் விவாதிக்கப்படும் கருத்துக்களின் அடிப்படையில் கூர்மையாக ஆராய்ந்து நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வணிகர்களின் கோரிக்கைகள் மற்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில், வரிக் குறைப்பு மற்றும் வரி விலக்கு அளிக்கப்படுவதுடன், 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் அவ்வப்போது திருத்தங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

## 11. வணிகர்கள் விழிப்புணர்வு முகாம்

வரிவிதிப்பு முறையில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டத்திருத்தங்கள் மற்றும் புதிய நடைமுறைகள் போன்றவற்றை அறிந்து கொள்ளும் வகையில், வணிகர்களிடையே விழிப்புணர்வு முகாம்கள் ஏற்படுத்தப்படும் என 2013–2014–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின் போது அறிவிக்கப்பட்டது. அதனை நடைமுறைப்படுத்தும்பொருட்டு அரசாணை (நிலை) எண்.123, வணிகவரி மற்றும் பதிவுத் (டி2) துறை, நாள் 25.09.2013–ல் ரூ.20 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது, வணிகர்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் விழிப்புணர்வு முகாம்கள், இணை ஆணையர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அது மட்டுமின்றி, உள்ளூரில் ஏற்படக்கூடிய சிறு பிரச்சினைகளை தீர்க்கும் பொருட்டு, தொழில் மற்றும் வணிகப் பிரதிநிதிகளின் மாவட்ட அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழு கூட்டம், மூன்று மாதங்களுக்கொருமுறை மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் கூட்டப்படுகிறது.

## 12. வரி சீரமைப்பு (Tax Reforms)

### 12.1 வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் கருதுவதற்கு வழிவகை செய்தது (Provision for Deemed Assessment)

ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் வணிகருக்கான வரிக்கணிப்பு ஆணையை கட்டாயம் பிறப்பிக்க வேண்டும் என்ற நடைமுறை கைவிடப்பட்டுள்ளது. வரி செலுத்தியதற்கான தகுந்த ஆதாரங்கள் மற்றும் தேவையான ஆவணங்களுடன் உரிய படிவத்தில் நமூனாக்கள் வணிகரால் சமர்ப்பிக்கப்பட்டால், அதைத் தொடர்ந்து வரும் ஆண்டின் அக்டோபர் மாதம் 31–ஆம் தேதியன்று அவர் வரிக்கணிப்பு செய்யப்பட்டதாக கருதப்படுவார். இந்த நடைமுறை 19.06.2012 முதல் அமலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

### 12.2 தெளிவுரை மற்றும் முன்தீர்வு முடிவு வழங்கும் அதிகார அமைப்பினை நிறுவியது (Constitution of Clarification and Advance Ruling Authority)

வரிவீதம் தொடர்பான கூறு எதனையும் தெளிவாக்குவதற்கு தெளிவுரை மற்றும் முன்தீர்வு முடிவு வழங்கும் அதிகார அமைப்பினை மாநில அளவில் அரசு நிறுவியுள்ளது. வணிகவரி ஆணையர், கூடுதல் ஆணையர் (மக்கள் தொடர்பு) மற்றும் கூடுதல் ஆணையர் (சீராய்வு மனு) ஆகியோரைக் கொண்ட இந்த அதிகார அமைப்பு, தனது செயல்பாட்டினை 31.10.2011 முதல் துவங்கியுள்ளது. இவ்வமைப்பு 31.3.2014 வரையான காலத்தில் ஏறத்தாழ 238 இனங்களில் தெளிவுரை வழங்கியுள்ளது.

## 12.3 சிறு வணிகர்கள் உள்ளீட்டு வரி வரவினைப் (Input Tax Credit) பெறுவதற்கு வழிவகை செய்தது

குறித்துரைக்கப்பட்ட வரிவிதிப்பு வரம்பினை கடந்திடலாம் என எதிர்பார்த்து வரி வசூலிக்கப்பட்டு, அவ்வரம்பினை கடக்காமல் இருக்கும் பதிவு பெற்ற சிறு வணிகர்களுக்கு உள்ளீட்டு வரி வரவு கிடைத்திடும் வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதற்கு முன்னர், இத்தகைய சிறு வணிகர்களால் வசூலிக்கப்பட்ட வரியானது, உள்ளீட்டு வரி வரவு எடுத்துக் கொள்வதற்கான பயனின்றி இழக்க நேரிட்டது. இந்த நடைமுறை 01.04.2012 முதல் அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

## 12.4 இணக்க வரி (Compounding Tax) செலுத்தும் முறையிலுள்ள முரண்பாட்டைக் களைந்தது

இணக்க வரி செலுத்தும் முறையின் கீழ், வரி செலுத்தும் வணிகரின் வரிவிதிக்கத்தக்க பொருட்கள் தொடர்பான விற்பனைத்தொகையானது, அந்த ஆண்டில் எப்பொழுது ஐம்பது இலட்சம் ரூபாய் என்ற அளவை எட்டுகின்றதோ, அத்தகைய வணிகர் ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட அவருடைய வரிவிதிக்கத்தக்க விற்பனைத்தொகையின் மீது மட்டும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வரிவீதங்களின்படி வரி செலுத்தினால் போதுமானது என்று 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தில் உரிய சட்டத் திருத்தத்தினை அரசு மேற்கொண்டது. இதற்கு முன்னர், வணிகர் தனது மொத்த வரிவிதிக்கத்தக்க விற்பனைத்தொகையின் மீது அட்டவணை

வரிவீதங்களின்படி வரி செலுத்த வேண்டியிருந்தது. இந்த நடைமுறை 01.04.2012 முதல் அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

### 12.5 துணை வணிகவரி அலுவலர்களின் வரிவிதிப்பு அதிகார வரம்பினை உயர்த்தியது

துணை வணிகவரி அலுவலர்களின் வரிவிதிப்பிற்கான அதிகார வரம்பு, ஆண்டு மொத்த விற்பனைத்தொகை ரூ.75 இலட்சத்திற்கு மிகாமல் (வரி விலக்களிக்கப்பட்ட இனங்கள் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழான விற்பனைத்தொகை உட்பட), வரித்தொகை மதிப்பீட்டு வரம்பின்றி இருக்கும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## 13. வரி விலக்குகள் / குறைப்புகள்

### 13.1 வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் மீதான மதிப்புக்கூட்டு வரி விலக்கு (Removal of VAT on domestic LPG)

வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் மீதான 4 விழுக்காடு வரி 01.07.2011 முதல் முற்றிலுமாக விலக்கிக் கொள்ளப்பட்டு, அதன் மூலம் ஒரு சிலிண்டரின் விலை ரூ.14.73 குறைக்கப்பட்டது. இதன் மூலம் 1.68 கோடி குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

### 13.2 ஜென்செட்டுகள் மீதான வரிக் குறைப்பு (Reduction in rate of tax for Gensets)

ஜெனரேட்டர்கள் மீதான வரிவீதத்தை 01.04.2008 முதல் குறைத்த போதிலும் (11.7.2011 வரை 4% மற்றும் அதன் பிறகு 5%), ஜென்செட்டுகளின் மீதான உயர்ந்த

வரிவீதம் (11.7.2011 வரை 12.5% மற்றும் அதன் பிறகு 14.5%) தொடர்ந்தது. இது தொழில் முனைவோர்களுக்கு இடர்பாடு ஏற்படுத்தியதோடு, இப்பொருட்களின் தவறான வகைப்பாட்டிற்கும் வழி வகுத்தது. இந்த வேறுபாட்டினைக் களையவும், மின் சக்தியினை பெருக்கிடவும் ஜென்செட்டுகள் மீதான வரிவீதம் 07.12.2012 முதல் 14.5 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாக குறைக்கப் பட்டுள்ளது.

## 13.3 உயரழுத்த மின் நுகர்வோர்கள் (High Tension Consumers) பயன்படுத்தும் எரி உலை எண்ணெய் (Furnace oil) மீது வரி விலக்கு

பொதுவாக, எரி உலை எண்ணெய் மீது 5 விழுக்காடு மதிப்புக்கூட்டு வரி விதிக்கப்படுகிறது. மின் சக்தி உற்பத்திக்கு எரி உலை எண்ணெயினைப் பயன்படுத்திடும் உயரழுத்த மின் நுகர்வோர்களுக்கு நிவாரணம் வழங்கிடும் பொருட்டு, 01.02.2012 முதல் 30.09.2012 வரையிலான காலத்திற்கு உயரழுத்த மின் நுகர்வோர்களால் ஜென்செட்டுகளில் பயன்படுத்தப்பட்ட எரி உலை எண்ணெயின் விற்பனைக்கு, மதிப்புக்கூட்டு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இந்த வரி விலக்கு 01.10.2012 முதல் 31.5.2013 வரையிலான காலத்திற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த நீட்டிக்கப்பட்ட கால நடவடிக்கையின் மூலம், அரசுக்கு ரூ.97 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

**13.4 மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் பின்பக்கம் மோட்டார் பொருத்தப்பட்ட பேட்டரியினால் இயங்கும் ஸ்கூட்டர்களுக்கு (Battery Operated Motorised Retrofitted Scooters) வரி விலக்கு**

பின்பக்கம் மோட்டார் பொருத்தப்பட்ட பேட்டரியினால் இயங்கும் ஸ்கூட்டர்களின் மீது 14.5 விழுக்காடு வரி விதிக்கப்பட்டு வந்தது. மாற்றுத்திறனாளிகளின் இடம் பெயரும் ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு, பின்பக்கம் மோட்டார் பொருத்தப்பட்ட பேட்டரியினால் இயங்கும் ஸ்கூட்டர்களின் விற்பனையின் மீது செலுத்த வேண்டிய மதிப்புக்கூட்டு வரிக்கு 14.12.2012 முதல் விலக்களிக்கப்பட்டுள்ளது.

**13.5 ஆடம்பர வரி (Luxury Tax) செலுத்துவதில் இருந்து விலக்கு பெறுவதற்கான உச்சவரம்பு உயர்வு**

சாதாரண, நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில், 1981–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வரிகள் மீதான வரிச்சட்டத்தின்கீழ் ஆடம்பர வரி செலுத்துவதில் இருந்து விலக்கு பெறுவதற்கான உச்சவரம்பு 199 ரூபாயிலிருந்து 499 ரூபாயாக 4.7.2013 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

## 14. சிறந்த முறையில் வரி வசூல் செய்வதற்கான நடவடிக்கைகள்

### 14.1 வர்த்தகப் புலனாய்வுப் பிரிவு (Business Intelligence Unit)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி வணிகவரி ஆணையரின் அலுவலகத்தில், அவருடைய நேரடி மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டில் வர்த்தகப் புலனாய்வு பிரிவு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. ஒரு இணை ஆணையர், ஒரு துணை ஆணையர், நான்கு உதவி ஆணையர்கள், ஒரு துணை வணிகவரி அலுவலர், ஒரு உதவி கணினி நிரலர் (Assistant Programmer) மற்றும் ஒரு புள்ளியியல் ஆய்வாளர் (Statistical Inspector)ஆகியோரைக் கொண்டு இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

மாநில வர்த்தகப் புலனாய்வுப் பிரிவு, வணிகர்களின் நமூனாக்கள், துறையின் சோதனைச் சாவடிகள், மத்திய மற்றும் பிற மாநில அரசுகளின் முகமைகள் போன்றவைகளிடமிருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கூர்ந்தாய்வு செய்கிறது. வரி ஏய்ப்பிற்குட்படும் பொருட்கள், வழக்கத்திற்கு மாறான உள்ளீட்டு வரி வரவு (Input Tax Credit) மற்றும் வரி திரும்பப் பெறுதல் தொடர்பான கோரிக்கைகள், அசாதாரண வெளிமாநில இருப்பு மாற்றம் (Stock transfer) போன்ற நேர்வுகளில் இப்பிரிவு சிறப்புக் கவனம் செலுத்துகிறது. ஒவ்வொரு செயலாக்கக் கோட்டங்களிலும் இணை ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டில் மாவட்ட வர்த்தகப் புலனாய்வுப் பிரிவுகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

## 14.2 பட்டயக்கணக்கர் (Chartered Accountant) / விலை மதிப்பீட்டுக்கணக்கர் (Cost Accountant) ஆகியோர்களைக் கொண்டு தணிக்கை செய்தல்

துறையுடனான வணிகப் பெருமக்களின் தொடர்பினை எளிதாக்கும் பொருட்டு, 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டப் பிரிவு 22(2)–க்கு திருத்தம் கொண்டு வரப்பட்டு, ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும், ஒவ்வொரு வணிகருக்கும் வரிக்கணிப்பு ஆணை வரிவிதிப்பு அலுவலரால் கட்டாயம் பிறப்பிக்க வேண்டும் என்ற நடைமுறை கைவிடப்பட்டுள்ளது. தேவையான ஆவணங்களை இணைத்து சரியான முறையில் நமூனாக்களை தாக்கல் செய்திருந்து, நமூனாக்களின்படி உரிய வரியினை செலுத்தியிருந்தால், அதனைத் தொடர்ந்து வரும் ஆண்டின் அக்டோபர் மாதம் 31–ஆம் தேதியன்று வணிகர் வரிக்கணிப்பு செய்யப்பட்டதாக தற்போது கருதப்படுவர்.

இந்த வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் கருதப்படும் முறையில் வணிகர்களால் சமர்ப்பிக்கப்படும் கணக்குகள் சரியானவையா என்பதை உறுதி செய்வது அவசியமாகிறது. இதற்காக, வணிகரின் கணக்குகளை ஒரு பட்டயக்கணக்கர் (Chartered Accountant) அல்லது ஒரு விலை மதிப்பீட்டுக் கணக்கரைக் (Cost Accountant) கொண்டு தணிக்கை மேற்கொள்ள வழிவகை செய்வதற்கு, 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச்சட்டத்தில், 63–A என்னும் பிரிவினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. சிறு மற்றும் நடுத்தர வணிகர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளைக் களைவதற்கு, வணிகர் ஒருவரின் பூஜ்ய வீத விறபனை மற்றும்

மாநிலங்களுக்கிடையேயான விற்பனை உள்ளடக்கிய மொத்த விற்பனைத்தொகையானது, ஆண்டு ஒன்றில் ரூபாய் ஒரு கோடிக்கு மேறபடும் நேர்வுகளில் மட்டுமே இந்த முறை பொருந்தும் என வரையறுக்கப்பட்டுள்ளது. ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், கேரளா, மகாராஷ்டிரம், குஜராத் போன்ற பிற மாநிலங்களின் மதிப்புக்கூட்டு வரிச் சட்டங்களில் இதே போன்ற வழிமுறை உள்ளது.

பல்வேறு தொழில் மற்றும் வர்த்தக சங்கங்கள் மற்றும் வணிகர்களின் கோரிக்கையை ஏற்று, ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் தணிக்கை அறிக்கையை சமர்ப்பிக்கும் காலக்கெடு ஏழு மாதங்களிலிருந்து ஒன்பது மாதங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## 15. தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் தொகுப்பு நிதியை (Corpus Fund) உயர்த்துதல்

வணிகர்களின் நலனுக்காக குடும்ப நல உதவி, மருத்துவ உதவி, கல்வி உதவி போன்ற பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்திட வணிகர் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டது.

இத்திட்டங்கள், அரசால் வாரியத்துக்கு அளிக்கப்பட்ட தொகுப்பு நிதியிலிருந்து பெறப்படும் வட்டி மற்றும் உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் ஒரு முறை செலுத்தக்கூடிய சந்தாத்தொகைக்கு இணையான அரசு மானியத்தைக் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன. உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணமாக ஆண்டுதோறும் ரூ.100/– செலுத்துவதிலிருந்து விலக்களித்தும், 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெறாத, தொழில் வரி உச்ச வரம்புக்கு கீழே உள்ள சிறு வணிகர்களும் சம்பந்தப்பட்ட

உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெற்ற உரிய உரிமத்தின் அடிப்படையில் இவ்வாரியத்தில் உறுப்பினர் ஆகலாம் என்று வழிவகை செய்தும் அரசாணை (நிலை) எண்.69, வணிகவரி மற்றும் பதிவுத்(டி2) துறை, நாள் 29.6.2011–ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. வணிகர்களுக்கான நலத்திட்டங்களை செவ்வனே நிறைவேற்றிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி வாரியத்திற்கு அளிக்கப்பட்ட தொகுப்பு நிதியை ரூ.2 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தி அரசாணை (நிலை) எண்.129, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 4.10.2012–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**16. பல்பொருள் சில்லறை வர்த்தகத்தில் (Multi-brand Retail Trade) அந்நிய நேரடி முதலீட்டிற்கு (Foreign Direct Investments) மறுப்பு**

2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 10 இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்களில் பல்பொருள் சில்லறை வர்த்தகத்தில் 51 விழுக்காடு அந்நிய நேரடி முதலீட்டை, 2012–ஆம் ஆண்டில் முந்தைய மத்திய அரசு அனுமதித்தது. பெரிய பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டியிட இயலாத சிறிய மற்றும் நடுத்தர வணிகர்களுக்கு இது எதிர்விளைவை ஏற்படுத்திடும் என்பதால் முந்தைய மத்திய அரசின் இந்த முடிவிற்கு தமிழக அரசு தனது பலமான எதிர்ப்பினைப் பதிவு செய்தது. மத்திய அரசு இந்த முடிவினை உடனே கைவிட வேண்டும் என்றும், மாநிலத்தில் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டினை தமிழக அரசு

ஒருபோதும் அனுமதிக்காது எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதிபட தெரிவித்துள்ளார்கள்.

தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களின் பலமான எதிர்ப்பின் காரணமாக, முந்தைய மத்திய அரசு தனது நிலையினை மாற்றிட நேரிட்டு, சம்பந்தப்பட்ட மாநில அரசின் ஒப்புதலின்றி, மாநிலத்தில் பல்பொருள் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்படமாட்டாது என தெரிவித்தது. அதற்கிணங்க, மாநிலத்தில் பல்பொருள் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டிற்கு தமிழக அரசு தனது ஒப்புதலை வழங்கவில்லை என்பதால், கணிசமான மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கிடும் சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளின் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளது.

## 17. துறையின் கட்டடங்களில் சூரிய சக்தியினை ஊக்குவித்தல்

2015–ஆம் ஆண்டுக்குள், சூரிய சக்தியின் மூலம் 3000 மெகாவாட் மின்சாரத் திறனை எட்டி, உலக அளவில் தமிழ்நாடு தலைசிறந்து திகழ வேண்டும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டமாகும். இந்த இலக்கினை எய்தும் நோக்கில் “தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை 2012”–ஐ அரசு வெளியிட்டுள்ளது. அரசளவில் சூரிய மேற்கூரை அமைப்புகளை (Solar Rooftop Systems) ஊக்குவிக்க மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் இந்தக் கொள்கையில் விவரிக்கப்பட்டுள்ளன. இக்கொள்கைக்கு இணங்க வணிகவரித் துறையில் கட்டப்படவுள்ள புதிய கட்டிடங்கள் அனைத்திற்கும் சூரிய மேற்கூரைகள் பொருத்தப்படும். துறையில் தற்போதுள்ள 41 அரசு கட்டிடங்களுக்கு சூரிய மேற்கூரை அமைப்புகள்

படிப்படியாக பொருத்தப்படும். இது துறையால் செலுத்தப்பட்டு வரும் மின்சாரக் கட்டணத்தினை குறைத்திட உதவும்.

## 18. சரக்கு மற்றும் சேவை வரி (Goods and Services Tax)

தேசிய அளவில் சரக்கு மற்றும் சேவை வரியை அறிமுகப்படுத்துவது குறித்த பிரேரணை அனைத்து மாநில நிதி/வரி அமைச்சர்கள் அடங்கிய அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் பரிசீலனையில் உள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள சரக்கு மற்றும் சேவை வரி மாநிலங்களின் நிதி தன்னாட்சி மற்றும் தமிழ்நாடு போன்ற உற்பத்தி மற்றும் நிகர ஏற்றுமதி கொண்டுள்ள மாநிலத்திற்கு ஏற்படுத்தக்கூடிய பெரிய அளவிலான நிரந்தர வருவாய் இழப்பு தாக்கத்தினைப் பற்றி மாநிலம் கவலை கொண்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள சரக்கு மற்றும் சேவை வரி குறித்தான மாநிலத்தின் ஆழ்ந்த கவலைகள் தொடர்ந்து நேரடியாக இந்திய அரசு முன்பாகவும் அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் முன்பாகவும் வைக்கப்பட்டு வருகிறது.

## 19. மத்திய அரசிடமிருந்து பெறப்பட வேண்டிய வருவாய் இழப்பீடு

### 19.1 மதிப்புக் கூட்டு வரி இழப்பீடு

மதிப்புக் கூட்டுவரி இழப்பீட்டு நிலுவைத் தொகை ரூ.650.44 கோடி மத்திய அரசிடமிருந்து பெறப்பட வேண்டியுள்ளது. மேற்படி நிலுவைத் தொகையை பெறுவது தொடர்பாக தேவையான ஆவணங்கள் மற்றும் விளக்கங்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 19.2 மத்திய விற்பனை வரி இழப்பீடு

சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பை அமல்படுத்தும்பொருட்டு 1.4.2007 முதல் மத்திய விற்பனை வரி 4 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகவும் 1.6.2008 முதல் 2 சதவீதமாகவும் குறைக்கப்பட்டது. அதனால் மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுசெய்யும் பொருட்டு, மத்திய அரசு பல்வேறு வருவாய்சாரா முறைகளை நடைமுறைப்படுத்தியும், நேரடியாக நிதி வழங்கிடவும் ஒப்புக் கொண்டுள்ளது. தமிழக அரசானது இழப்பீடு கோரிக்கைகளை தொடர்ந்து சமர்ப்பித்து கொண்டிருந்தும் உறுதியளிக்கப்பட்டபடி முழுவதுமாக இழப்பீட்டுத் தொகை பெற இயலவில்லை. 1.4.2007 முதல் 31.3.2012 வரை மாநில அரசுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீடான ரூ.9735.38 கோடியில் ரூ.2636.50 கோடி மட்டுமே மத்திய அரசால் விடுவிக்கப்பட்டது. 31.3.2012 வரையான நிலுவை இழப்பீடு ரூ.7098.88 கோடி மத்திய அரசிடமிருந்து பெறப்பட வேண்டியுள்ளது. 2012–13–ஆம் ஆண்டிற்கான இழப்பீட்டுத் தொகை மாநிலக் கணக்காயரால் சான்றளிக்கப்பட்ட தொகையின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

## 20. தகவல் தொழில்நுட்பம்

அரசு தகவல் மையத்தின் உதவியுடன் வணிகவரித் துறையின் கணினிமயமாக்கல் 1973–ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. பின்னர், 1988–ஆம் ஆண்டில் வணிகவரித் துறையானது தனக்கென ஒரு தகவல் மையத்தினை அமைத்து, மாநிலம் முழுவதிலும் இருந்து பெறப்படும் மாதாந்திர நமூனாக்களை இத்தகவல் தொகுப்பு மையத்தில் பதிவு செய்து, அதனை பரிசீலினை செய்து மேலாண்மை தகவல் முறை அறிக்கைகளை

(Management Information System Report) தயார் செய்தது.

2003–ஆம் ஆண்டில் துறையால் கள அலுவலகங்களின் கணினிமயமாக்கல் பெருமளவில் தொடங்கப்பட்டது. இதன் மூலம் சென்னையிலுள்ள மைய சேவையகத்துக்கு (Central Server) தகவல்கள் வழங்குவதற்காக, துறை அலுவலகங்களுக்கு கணினிகள் மற்றும் அதனுடனான இணைப்புகள் ஏற்படுத்தித் தரப்பட்டன.

தற்போது, துறையின் அனைத்து அலுவலகங்களுக்கும் கணினிகள் மற்றும் பன்செயல் கருவிகள் உட்பட புறக்கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. துறையின் அலுவலகங்கள் அமைந்துள்ள 215 இடங்களும் அந்தந்த அலுவலகங்களுக்கு அருகாமையிலுள்ள தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் (TNSWAN), இருப்பு முனையின் (Point of Presence) மூலம் 2 Mbps வழித்தடங்களால் இணைக்கப்பட்டு, துறைக்கான பெரியதொரு பெரும்பரப்பு வலையமைப்பு (Wide Area Network) உருவாக்கப்பட்டுள்ளது.

பல்வேறு மின்னணு வழி சேவைகளை வணிகப் பெருமக்கள் உபயோகப்படுத்திட துறை www.tnvat.gov.in என்ற சொந்த வலைதளத்தினை கொண்டுள்ளது. மேலும் கூடுதலாக, பல்வேறு மென்பொருள் பிரிவுகளை உபயோகப்படுத்துவதற்கும், துறையின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பல்வேறு மேலாண்மை தகவல் முறை அறிக்கைகளை (Management Information System Report)

அனைத்து துறை அலுவலர்களும் காண்பதற்கும் ஏதுவாக துறை http://www.tnct.gov.in என்ற அக இணைய வலைதளத்தினை (Intranet) கொண்டுள்ளது.

## 21. வணிகர்களுக்கு வழங்கப்படும் மின்னணு சேவைகள் (Electronic Services provided to dealers)

தற்போது, வணிகர்கள் பயன்பாட்டிற்காக துறையுடன் தொடர்பு கொள்ள கீழ்க்கண்ட மின்னணு சேவைகள் வழங்கப்படுகின்றன:–

### 21.1 வணிகர்களின் பதிவு (Registration of Dealers)

ஒரு புதிய வணிகர் தனது பதிவு எண் பெறுவதற்கான விண்ணப்பத்தினை மின்னணு முறையில் பதிவு செய்யலாம். இந்த விண்ணப்பமானது வரிவிதிப்பு அலுவலகத்தில் பரிசீலிக்கப்பட்டு, வணிகர்களுக்கு பதிவுத் தபால் மூலம் பதிவுச் சான்றிதழ் அனுப்பி வைக்கப்படுகிறது.

### 21.2 மின்னணு முறையில் நமூனாக்கள் தாக்கல் செய்தல் (e-Filing of Returns)

அனைத்து வணிகர்களும், மதிப்புக் கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டங்களின் கீழ் தாக்கல் செய்ய வேண்டிய மாதாந்திர நமூனாக்களை மின்னணு முறையில் தாக்கல் செய்ய வேண்டுமென நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, தற்போது சுமார் 3,30,000 வணிகர்கள் (மொத்த வணிகர்களில் 80 விழுக்காடு) மாதந்தோறும் நமூனாக்களை மின்னணு

முறையில் தாக்கல் செய்து வருகிறார்கள். அனைத்து வணிகர்களும் (100%) மின்னணு முறையில் நமூனாக்கள் தாக்கல் செய்வதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 21.3 இணையதளம் வழியாக வங்கிகளில் நேரடியாக வரி செலுத்தும் வசதி (e-payment through net banking)

அரசாணை (நிலை) எண். 39, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 09.04.2013–ன்படி அங்கீகரிக்கப்பட்ட 19 பொதுத்துறை / தனியார் வங்கிகளின் மூலம், இணையதளம் வழியாக வரி செலுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மின்னணு முறையில் தனியார் மற்றும் பொதுத்துறை வங்கிகளின் மூலம் கடந்த நிதியாண்டில் 2013–14–ல் ரூ.34,018 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. இது மொத்த வரி வசூலில் 60 விழுக்காடு ஆகும். நடப்பாண்டு 2014–15–ல் (ஜுன் மாதம் வரை) ரூ.9,210 கோடி வரி வசூலிக்கப்பட்டுள்ளது. இது நடப்பாண்டு மொத்த வரி வசூலில் 68 விழுக்காடாகும். இவ்வசதியின் மூலம் அரசு கணக்கில் வரி வருவாய் உடனடியாக சேருவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 21.4 மின்னணு வழி வரி செலுத்துதல் (e-payment through e-chalan)

வணிகர்கள் மின்னணு முறையில் இணையதளம் மூலமாக வரி செலுத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டதுபோல், தற்பொழுது மின்னணு செலுத்துச் சீட்டு மூலம் நேரிடையாக வங்கிகளுக்கு சென்று தங்களது வரியினை செலுத்துவதற்குரிய வசதியும்

நடப்பாண்டில் நடைமுறைப்படுத்த வழி வகைகள் செய்யப்பட்டு வருகிறது.

### 21.5 மின்னணு முறையில் 'C' மற்றும் 'F' படிவங்கள் உருவாக்கிக் கொள்ளுதல் (Online issue of 'C' & 'F' forms)

மின்னணு முறையில் சமர்ப்பிக்கப்படும் மாதாந்திர நமூனாக்களின் அடிப்படையில், வணிகர்கள் தாங்களே 'C' மற்றும் 'F' படிவங்களை உருவாக்கிக் கொள்ளும் வசதி 2012–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதியை பயன்படுத்துவதன் மூலம் வணிகர்கள் தங்களுக்கான 'C' மற்றும் 'F' படிவங்களைப் பெற வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு செல்ல வேண்டிய தேவை குறைகிறது. சுமார் 20 லட்சம் மின்னணுப் படிவங்கள் வணிகர்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது.

31.10.2012–க்கு முந்தைய காலத்திற்கு நிலுவையிலுள்ள 'C' மற்றும் 'F' படிவங்களை பதிவிறக்கம் செய்து கொள்ள 13.02.2014 முதல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வசதியினை 15.08.2014 வரை வணிகர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

### 21.6 சோதனைச் சாவடிகளில் விரைவு வழி அனுமதி முறை (Fast Track Clearance System at the Checkposts)

இச்சேவையின் வாயிலாக வணிகர்கள் தங்கள் வாகனங்களில் கொண்டு செல்லும் பொருட்கள் பற்றிய விவரங்களை துறைக்கான இணையதளத்தில் பதிவேற்றம் செய்து, அதன் மூலம் பெறப்படும் ஒப்புகை

சீட்டுடன் தங்கள் சரக்குகளை வாகனங்களில் கொண்டு செல்லலாம். வணிகர்கள் கொண்டுவரும் ஒப்புகை சீட்டில் உள்ள விவரங்கள் சோதனைச் சாவடி அலுவலர்களால் கணினி மூலம் சரிபார்க்கப்பட்டு, உரிய பதிவுகள் செய்யப்பட்டு, வாகனம் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படும். இச்சேவையினால் வாகனங்கள் சோதனைச் சாவடியில் விரைவு அனுமதி பெறுவதால் நேரம் சேமிக்கப்படுவதுடன், சோதனைச் சாவடிகளில் ஏற்படும் நெரிசலை குறைக்கவும், தவறுகள் ஏற்படா வண்ணம் இருக்கவும் உதவுகிறது.

## 21.7 மின்னணு முறையில் இடைவழிச் சீட்டு பெறுதல் (Online issue of Transit Pass)

வணிகர்கள், 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டம் 6–வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை பிற மாநிலங்களுக்கு கொண்டு செல்வதற்கான இடைவழிச் சீட்டினை, வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு நேரில் செல்லாமலேயே எல்லா நாட்களிலும் மின்னணு முறையில் தயாரித்துக் கொள்ளும் முறை, நவம்பர் 2011 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வணிகர்கள் கொண்டு வரும் இடைவழிச் சீட்டில் உள்ள விவரங்கள் சோதனைச் சாவடி அலுவலர்களால் கணினி மூலம் சரிபார்க்கப்பட்டு, உரிய பதிவுகள் செய்யப்பட்டு, வாகனம் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படும்.

இந்த மின்னணு இடை வழிச்சீட்டு முறை, சமையல் எண்ணெய் மற்றும் இரும்பு (ம) எஃகு ஆகிய பொருட்களுக்கும் 8.11.2013 முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 2,50,000க்கும் மேற்பட்ட மின்னணு இடை வழிச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

## 21.8 ஏற்றுமதியாளர்கள் வரி திருப்புகை பெறுதல் (Refunds to exporters)

பூஜ்ய வரி விற்பனையில் உள்ளீட்டு வரி திரும்பக் கோரும் ஏற்றுமதியாளர்களுக்கு, மின்னணு முறை மூலம் படிவம் 'W' தாக்கல் செய்யும் நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் அமல்படுத்தப்பட்டபின், தற்போதைய நடைமுறையைக் காட்டிலும் விரைவாக ஏற்றுமதியாளர்களுக்கு வரித் திருப்புகை கிடைக்கிறது. வரித் திருப்புகையின் அவ்வப்போதைய நிலையினை இணையதளத்தின் வாயிலாக அறியும் வசதி உள்ளது. மேலும், வணிகர்கள் அலுவலகத்திற்கு நேரடியாக வர வேண்டிய தேவை மிகக் குறைவாக உள்ளது. ஏற்றுமதி விற்பனையை செல்லத்தக்கதாக ஆக்க, அரசின் சார்பாக புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்காக (MoU) நியமிக்கப்பட்ட இணை ஆணையர் மற்றும் வெளிநாட்டு வர்த்தக இயக்குநருக்கிடையில் (Director General of Foreign Trade) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) கையொப்பமிடப்பட்டுள்ளது.

## 21.9 மின்னணு முறையில் வருடாந்திரப் படிவங்கள் தாக்கல் செய்தல் (e-filing of Annual Returns)

மின்னணு முறையில் வருடாந்திரப் படிவங்களை தாக்கல் செய்யும் வசதியின் மூலம் இதுவரை சுமார் 12,600 வணிகர்கள் படிவங்களை மின்னணு முறையில் தாக்கல் செய்துள்ளனர். இந்த ஆண்டில் (2014–2015) சுமார்

2.25 லட்சம் வணிகர்கள் இவ்வசதியினை பயன்படுத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 21.10 தகவல் மீட்பு ஆய்வகம் (Data Retrieval Lab)

மேம்பட்ட தகவல் தொழில் நுட்ப மென்பொருட்களின் உதவியால் வரி ஏய்ப்பு போன்ற செயல்களில் ஈடுபடும் வணிகர்களைக் கண்டறிய தகவல் மீட்பு ஆய்வகம் உதவி புரிகிறது.

வணிகர்களின் வணிகத் தலங்களிலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட சேமிப்பு உபகரணங்களான வன்தட்டு (Hard Disk) போன்றவை மீட்கப்பட்டு, தகவல் மீட்பு ஆய்வகத்தில் பகுத்தாய்வு செய்யப்பட்டு வருகிறது. தகவல் மீட்பு செய்வது குறித்த பயிற்சிகள் துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## 21.11 இதர மின்னணு சேவைகள் (Other online Services)

வணிகப் பெருமக்களுக்காக கீழ்க்கண்ட வசதிகள் / சேவைகள் www.tnvat.gov.in என்ற வலைதளத்தில் செய்து தரப்பட்டுள்ளன:—

- சட்டங்கள், விதிகள், படிவங்கள், சுற்றறிக்கைகள், தெளிவுரைகள், அரசு ஆணைகள் மற்றும் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டவுடன் அறியும் வசதி

- வணிகர் பற்றிய விவரங்கள், செலுத்திய வரி போன்ற விவரங்களை அறிய வணிகர் பேரேடு (Dealer's Ledger) வசதி

- பொருட்களின் அட்டவணை மற்றும் வரிவிகிதம் தெரிந்து கொள்ளும் வசதி

- வரி செலுத்துவோர் அடையாள எண் அல்லது பெயர் மூலம் வணிகர்களின் முழு விவரங்களைத் தெரிந்து கொள்ளும் வசதி

மேலும், துறையின் அலுவலர்களுக்கு, அக இணைய வலைதளம் (Intranet) மூலம் கீழ்காணும் வசதிகள் வழங்கப்பட்டு வருகிறது.

- வரிவிதிப்பு வட்டம் முதல் மாநில அளவில் வரை பல்வேறு சட்டங்களின்கீழ் வசூலிக்கப்பட்ட வரி வருவாய் பற்றிய உடனடி அறிக்கைகள்
- துறை அலுவலர்களின் செயல்திறன் குறித்த புள்ளிவிவர அறிக்கைகள்
- துறை வெளியிடும் சட்டம் மற்றும் விதிகள், அரசு ஆணைகள் மற்றும் அறிவிக்கைகள், படிவங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் தெளிவுரைகள்
- மாதாந்திர நமூனாக்கள் தாக்கல் செய்த / செய்யாத வணிகர்கள் தொடர்பான அறிக்கை, மாதாந்திர நமூனாக்கள் மீதான தணிக்கைகள், உள்ளீடு மற்றும் வெளியீடு வரிகளின் விவரங்கள் மற்றும் அதன் மீதான மேலாண்மை அறிக்கைகள்(MIS Reports)

- வணிகர்கள் தாக்கல் செய்த உள்ளீட்டு வரி வரவு விவரங்களை மின்னணு (Online) குறுக்கு தணிக்கை செய்தல்
- மின்னணு முறையில், தவறான உள்ளீட்டு வரி கோரிக்கைகள் மீதான அறிவிப்பு தயார் செய்தல்
- வரிவிதிப்பு வட்டங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளுக்கான மென்பொருள் ஒருங்கிணைக்கப்பட்டு, அதன் மூலம் வரிவிதிப்பு அலுவலர்கள் மாதாந்திர நமூனாக்களில் பெறப்பட்ட விவரங்களை சோதனைச் சாவடியில் பதிவு செய்யப்பட்ட விவரங்களுடன் ஒப்பீடு செய்யும் வசதி
- மின்னஞ்சல் வசதி

மேற்காணும் வசதிகளைப் பயன்படுத்தி வரி ஏய்ப்பு செய்யும் வணிகர்களை, வணிகவரித்துறை அலுவலர்கள் எளிதில் இனங்கண்டு, வரி ஏய்ப்பைத் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாகிறது.

## 21.12 வரித் தகவல் பரிமாற்ற அமைப்பு (Tax Information Exchange System)

வரித் தகவல் பரிமாற்ற அமைப்பு அனைத்து மாநில வணிகவரித் துறைகளிடையே தகவல் பரிமாற்றம் செய்து கொள்வதற்கு ஏதுவாக, மாநில நிதி அமைச்சர்களைக் கொண்ட அதிகாரமளிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட தீர்வாகும். இத்திட்டம், மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகப் பரிமாற்றங்களைச் சிறந்த முறையில் கண்காணிக்கப் பயன்படுகிறது. இதன் மூலம் வணிகப்பெருமக்களும், துறை அலுவலர்களும் மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட

சட்டப்பூர்வ படிவங்கள் பற்றிய விவரங்கள் மற்றும் வணிகர்களின் நிலை பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள முடியும்.

### 21.13 முழுமையான கணினிமயமாக்கல் (Total Solution Project)

வணிகர்களின் தேவைகளை மையப்படுத்தியும், வரி ஏய்ப்பினை கட்டுப்படுத்தவும் வளர்ந்து வரும் தொழில் நுட்பத்தின் உதவியுடன், துறையின் முழுமையான கணினிமயமாக்கலுடன் கூடிய ஒருமுகப்படுத்தப்பட்ட மின் ஆளுமைத் திட்டத்தினை வணிகவரித்துறை அறிமுகப்படுத்த உள்ளது. மேற்கண்ட குறிக்கோளை அடைவதற்கு உதவும் வகையில், துறையின் அனைத்து செயல்பாடுகளையும் ஆராய்ந்து முழுமையான தீர்வுக்கான வழிவகைகளை பரிந்துரைக்கும் பொருட்டு, திருவாளர்கள் ஆக்செஞ்சர்(Tvl.Accenture) என்ற தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனம் நியமிக்கப்பட்டது.

திருவாளர்கள் ஆக்செஞ்சர் (Tvl.Accenture) நிறுவனம், ஏப்ரல் 2011 முதல் வணிகவரித் துறையின் நடைமுறைகள் மற்றும் உள் கட்டமைப்பு பற்றிய விரிவான ஆய்வினை மேற்கொண்டு, ஏனைய நாடுகளில் உள்ள நடைமுறைகளுடன் ஒப்பிட்டு, வணிகவரித் துறையின் குறிக்கோள்களை அடைய புதிய வடிவமைப்பினை உருவாக்கியுள்ளார்கள்.

துறையின் கணினிமயமாக்கலில் முழுமையான தீர்வு காண ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.230.96 கோடியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கான கணினி ஒருங்கிணைப்பாளரை தேர்வு செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, திருவாளர்கள் டாட்டா

கன்ஸல்டன்சி சர்வீசஸ் என்ற நிறுவனம் இப்பணியை மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டது. அதற்கான ஒப்பந்தம் 9.12.2013 அன்று கையெழுத்திடப்பட்டது. செயல்பாட்டுத் தேவைகளுக்கான விவரக் குறிப்புகள் (Functional Requirement Specification) உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. செப்டம்பர் 2014 முதல் சோதனை ஓட்டம் தொடங்கப்பட்டு, அக்டோபர் 2014 முதல் மாநில அளவிலான செயல்பாடுகள் இரண்டு கட்டங்களாகச் செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்திடவும், துறைக்கான மென்பொருள் மேம்படுத்துவதில் உள்ள தடைகளைக் களையவும் இத்திட்டமானது ஒரு முழுமையான மற்றும் சரியான திட்டமாக உருவாகிடவும் திருவாளர்கள் டாட்டா கன்ஸல்டன்சி சர்வீசஸ் நிறுவனத்துடன் இணைந்து செயல்பட துறை அலுவலர்களைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட புதிய திட்டத்தினை செயல்படுத்தும் வகையில் வணிகவரித்துறையின் அனைத்து அலுவலகங்களிலும் புதிய கணினிகள் மற்றும் அதற்கான உபகரணங்கள் நிறுவப்பட உள்ளது. இதன் மூலம் துறையின் அனைத்து செயல்பாடுகளும் கணினிமயமாக்கப்படும். இதனால் வணிகர்கள், துறை அலுவலர்களுடன் நேரடித் தொடர்பு கொள்ளும் தேவை குறைகிறது. இதன் மூலம் வணிகவரித் துறையின் செயல்பாடுகள் எளிதாக்கப்படுவதுடன், வணிகர்களுக்கு பலவழிகளிலும் தரமான மின்னணு சேவைகள் வழங்கவும், தெளிவான வரி நிர்வாக அமைப்பை உருவாக்கி, வரி ஏய்ப்பினை கட்டுப்படுத்தவும் ஏதுவாக இருக்கும்.

## 22 உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

### 22.1 சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

பொதுவாக, தனியார் கட்டடங்கள் அரசுத்துறை அலுவலகத்தின் தேவைக்கேற்ப வசதிகளுடன் இல்லாததால், இக்கட்டடங்களில் இயங்கிவரும் அரசு அலுவலகங்களை நாடி வரும் வணிகர்கள் மற்றும் அங்கு பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சிரமத்திற்குள்ளாகின்றனர். பணியாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு கூடுதல் வசதி செய்திடவும் பணி செய்வதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்க சொந்த கட்டடங்கள் தேவை என்பதைக் கருத்திற் கொண்டு **2011–2012**–ஆம் ஆண்டில் ரூ.**23** கோடி செலவில் **39** அலுவலகங்களை உள்ளடக்கிய **16** கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது. இவற்றில் திருச்சியில் வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம், சேலம், திருவண்ணாமலை, மயிலாடுதுறை மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டட வளாகம், பண்ருட்டி, நன்னிலம், லால்குடி மற்றும் கோவில்பட்டி ஆகிய இடங்களில் வணிகவரி அலுவலக கட்டடங்கள், ஈரோட்டில் வணிகவரி அலுவலக இணைப்புக் கட்டடம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் புழல் தணிக்கைச் சாவடி கட்டடம் ஆகிய அலுவலகக் கட்டடங்களின் பணிகள் நிறைவுற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **11.6.2014** அன்று காணொலிக்காட்சி மூலம் திறந்துவைக்கப்பட்டது. இதரக் கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது. **2012–13** ஆம் ஆண்டில் ரூ.**11.18** கோடி செலவில், **16** வணிகவரி அலுவலகங்களுக்கு இராணிப்பேட்டை, விருத்தாசலம், அரியலூர், கள்ளக்குறிச்சி, செஞ்சி, அரூர், அம்பாசமுத்திரம், நாங்குநேரி, திருச்செந்தூர் மற்றும் திருப்பூர் ஆகிய **10** இடங்களில் கட்டடங்கள்

கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 4, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 22.1.2013–இல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அனைத்து இடங்களிலும் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பெரும்பாலான கட்டடங்கள் விரைவில் முடிக்கப்படும்.

வணிகவரித்துறை பணியாளர்கள் மற்றும் வணிகர்களின் தேவையினை கருத்திற்கொண்டு, தற்பொழுது கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள கட்டடங்கள், சாய்தளம் மற்றும் கைப்பிடிகள், பார்வையாளர் பகுதி, போதிய கழிப்பறை வசதிகளோடு, மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, தீயணைப்பு ஏற்பாடுகள் போன்றவற்றுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

13.5.2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சட்டப் பேரவை விதி எண் 110–ன் கீழ் ரூ.10.93 கோடி செலவில் 7 இடங்களில், 9 வணிக வரி அலுவலகங்கள் 2012–ஆம் ஆண்டு தமிழ் நாடு சூரிய மின்சக்திக் கொள்கையின்படி சூரிய மின்சக்திக் கூரைகள் பொருத்தப்பட்டு கட்டப்படும் என அறிவித்தார்கள். அதற்கிணங்க, அரசாணை (நிலை) எண்.24, வணிகவரி மற்றும் பதிவுத்(டி2) துறை, நாள் 26.02.2014–ல் நிர்வாக ஒப்புதலும் நிதி ஒதுக்கீடும் அளிக்கப்பட்டு, பணிகள் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

## 22.2 சோதனைச்சாவடிகள் மற்றும் சோதனை முனையங்களை நவீனமயமாக்குதல் (Modernisation of Checkposts and Check Points)

பணியாளர் பற்றாக்குறை, இணையதளங்களில் ஏற்படும் தடங்கல்கள், மின்தடை, அமைவிடங்கள் சரியாக அமையாமை, இடம் பற்றாக்குறை போன்ற பல்வேறு காரணங்களால் துறையிலுள்ள, 28 சோதனைச் சாவடிகள் மற்றும் 8 சோதனை முனையங்கள் இயங்குவதில் மிகுந்த சிரமமாக இருந்தது. இந்த இடர்பாடுகளைக் களையவும், சோதனைச் சாவடி மற்றும் சோதனை முனையங்களை நவீனப்படுத்தவும், அரசாணை (நிலை) எண் 94, வணிகவரி மற்றும் பதிவுத் (அ1) துறை, நாள் 9.7.2012–இன்படி ரூ.33.36 கோடி (தொடரா செலவினம் – ரூ.28.95 கோடி, தொடர் செலவினம் – ரூ.4.41 கோடி) ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டது. இத்தொகையானது, நிலம் கையகப்படுத்துதல், புதிய கட்டடங்கள் கட்டுதல், கட்டடங்களை புதுப்பித்தல், வாகனங்கள் வாங்குதல், ஜென்செட்டுகள் வாங்குதல் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## 22.3 சென்னை வணிகவரி கோட்டங்களின் எல்லையை மறு சீரமைத்தல் (Reorganisation of Chennai Commercial Taxes Divisions)

2013–2014ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, சென்னையிலுள்ள நான்கு வணிகவரிக் கோட்டங்களை மறுசீரமைத்து, அவற்றின் பணிகள் நெறிப்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேற்காணும் அறிவிப்பை

செயல்படுத்துவது குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில், புவியியல் தொடர்ச்சி மற்றும் ஒவ்வொரு வரிவிதிப்பு வட்டத்திலுள்ள வரிவிதிப்பாளர்கள் மற்றும் வேலைப் பளுவினை சமமாக பகிர்ந்தளிக்கவும், மேலும் எதிர்கால வணிக வளர்ச்சி மற்றும் பதிவு பெற்ற முகவர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டும் சென்னை வணிகவரிக் கோட்டங்களின் எல்லையை மறுசீரமைத்து அரசாணை (நிலை) எண்.23, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 27.3.2014–ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்காணும் மறுசீரமைப்பின் காரணமாக நான்கு சென்னை வணிகவரி கோட்டங்களிலும் ஒவ்வொரு கோட்டத்திற்கும் தோராயமாக 29,000 வரி விதிப்புக்குட்படுத்தப்படுவோர் (Assessees) கொண்ட 25 வட்டங்கள் இருக்கும்.

## 23. 2005–ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம்

அரசு அமைப்புகள் வெளிப்படையாக இயங்குவதற்காக, 2005–ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் இயற்றப்பட்டது. வணிகப் பெருமக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ள வணிகவரித்துறை அதன் செயல்பாடுகள் எளிமையாகவும், வெளிப்படையாகவும் இருப்பதை உறுதி செய்கிறது. இக்குறிக்கோளை எய்திடும் நோக்கில், 2005–ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அனைத்து மனுக்களுக்கும் இத்துறை சிறப்பு முக்கியத்துவம் அளித்து, உரிய தகவல்களை

அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அளித்து வருகிறது.

## 24. 2014–2015–ஆம் ஆண்டிற்கான பகுதி– I I திட்டங்கள் (Part – I I Scheme)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | வணிகவரித்துறை | |
| 1. | 3 கணிப்பொறிகள் வாங்குதல் | 1.35 |
| 2. | கோயம்புத்தூர் செயலாக்கப் பிரிவு அலுவலகத்தில் வாகனங்கள் நிறுத்துவதற்கான கூரை (car shed for parking vehicles) அமைத்தல் | 19.00 |
| 3. | சுற்றும் படைகள் வாகனத் தணிக்கை மற்றும் கண்காணித்தல் நடவடிக்கை மேற்கொள்ள உலக இடம் காட்டு அமைப்பு கொண்ட தொழில்நுட்ப கருவி(online vehicles monitoring systems based on GPS technology) வாங்குதல் | 29.50 |
| | தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | |
| 4. | தீர்ப்பாய அலுவலகத்திற்கு 5 கணிப்பொறி (systems) ஒளி அச்சு நகல் (laser printer), தடையில்லா மின்சாதன கருவி(UPS) மற்றும் இதர துணை பொருட்கள் வாங்குதல் | 2.60 |

| | | |
|---|---|---|
| 5. | சென்னை, மதுரை மற்றும் கோவை தீர்ப்பாய அலுவலகங்களுக்கு மூன்று நகல் பெருக்கி (Xerox machine) வாங்குதல் | 2.73 |
| 6. | சென்னை, மதுரை மற்றும் கோவை தீர்ப்பாய அலுவலகங்களுக்கு மூன்று நிகரி கருவிகள் (Fax machine) வாங்குதல் | 0.40 |

**எம்.சி.சம்பத்**
**வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்**